# மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமைசபை

(1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது)

## பதவி வெற்றிடங்கள்

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமைசபையில் பின்வரும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III (வெற்றிடங்கள் 05)**

**தகைமைகள் (வெளிவாரி விண்ணப்பதாரிகள்)**

**கல்வித் தகைமைகள்:**

(அ) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் (B) ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று (03) (பொது அறிவுப் பரீட்சை தவிர) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்கான விசேட ஏனைய தகைமைகள்

i. மேலே ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறையில் அனுபவம் (சான்றிழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

ii. கணனி பயன்படுத்துதல் தொடர்பில் அறிவு விசேட தகைமையொன்றாகக் கருதப்படும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

(அ) ஆரம்ப – மட்டம் - திறண் சாராத மற்றும் திறண் சார் சேவைப்பிரிவில் கீழே ‘‘ஆ’’, ‘‘இ’’ மற்றும் ‘‘ஈ’’ பந்திகளில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய ஊழியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் (B) ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(கணனி சொல் செயன்முறைப்படுத்தல் (Word processing)/ தட்டச்சு செய்தல் (Typing) தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கற்கை நெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது ஏனைய அதற்கு சமமான மட்ட தகைமையொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் உரிய சந்தர்ப்பங்களில் தகைமையொன்றாக கருதப்படும்)

(இ) சேவை நிரந்தர நியமன அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதோடு, அத்தகைய நியமனங்களில் பதவி உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் ஒன்றின் கீழ் ஆகக் குறைந்தது 05 வருடங்கள் தொடராக திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது**: விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாமாட்டாது.

**சம்பள அளவுத்திட்டம்**: ரூ.27,910-10x300-7x350-12x600-12x710-49,080/- (மேலே குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

**பொதுவான நிபந்தனைகள்:**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்,

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடல் ரீதியாக மற்றும் உள ரீதியாக தகைமையுடையவராக இருக்க வேண்டும்.

III. நல்ல நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

(ஆ) சகல பதவிகளும் நிரந்தரமானவையாகும் என்பதோடு ஓய்வூதியத்துக்கு உரித்து அற்றதாகும்.

(இ) சகல விண்ணப்பதாரிகளும் முகாமை சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றிய பின்னர் தெரிவு செய்யப்படுவர்.

(ஈ) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் பங்களிப்பு சம்பளத்திலிருந்து 10% சதவீதம் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதோடு தொழில் தருனரினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12% சதவீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% சதவீதமும் செலுத்தப்படும்.

(உ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் மருத்துவ அல்லது விபத்துக் காப்புறுதி திட்டம் போன்ற அனுகூலங்களுக்கும் உரித்துடையவராவர்.

(ஊ) மேலே சொல்லப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பிலான சான்றிதழ்களின் பிரதிகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். (அத்தாட்சிப்படுத்தப்பட்டு பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்).

தயவு செய்து மேலே விபரிக்கப்பட்ட தகவல்கள் உள்ளடங்களாக விண்ணப்பதாரி தொடர்பாக விசாரணை செய்யக்கூடிய உறவினர் அல்லாத இரு மத்தியஸ்தர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்கள் உள்ளடங்கிய சுயவிபரம் ஒன்றுடன் விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு **2023.12.04** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். விண்ணப்பம் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

மார்ஷல்,
மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி,
த.பெ.இல. 223,
கொழும்பு 12.